## இலங்கை சுற்றுலாத் துறையின் முன்னணி நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்

# இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) என்பது சுற்றுலா மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டமிடல், அபிவிருத்தி, ஒழுங்குபடுத்துதல் மற்றும் கொள்கை அமுலாக்கம் ஆகியவற்றுடன் பணிபுரியும் அரசாங்க நிறுவனமாகும். சுற்றுலாத் துறையானது தேசிய அளவில் முக்கியமான பங்களிப்புச் செய்யும் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தின் பொருளாதாரத்திற்கு இந்தத் துறையானது மிக உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உயர் மட்டத்திலான முதலீட்டாளர் திட்டங்களை நாட்டிற்குள் ஈர்க்கிறது.

## பணிப்பாளர் / சட்டம்

சட்டப் பிரிவின் தலைவராகவும் சிக்கலான சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு பொறுப்பு கூறல் வேண்டும் என்பதுடன் பிரிவின் நோக்கத்தை இலக்காகக் கொண்டு இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**பணி**

- சட்ட விஷயங்களின் அனைத்து அம்சங்களிலும் சட்டப் பிரிவு மற்றும் உயர் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல்.
- தற்போதைய செயற்பாடுகள், இயக்கங்கள் மற்றும் மூலோபாய முயற்சிகள் குறித்த சாத்தியமான சட்ட சிக்கல்களை அடையாளம் காணுதல், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வழக்கு முகாமைத்துவதிற்கு வழிவகுத்தல்.
- ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பொறுப்புக்கூறுதல்.
- புதிய / ஏனைய அதிகார வரம்புகளில் செயற்பாடுகளை நிறுவுவதற்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஆராய்ச்சி பங்களிப்புகளை வழங்குதல்.
- நிறுவனத்தை நிர்வகிக்கும் கட்டமைப்புகளுடன் ஒழுங்குமுறை இணக்கத்தை உறுதி செய்தல் / பொறுப்புக்கூறல்.
- முறைசாரா துறை விரிவாக்கத்தையும், முறைசாரா துறையில் புதிய பகுதிகளை உள்வாங்குவதை குறைப்பதற்கு அதை செயற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்தல் மற்றும் மூலப்பிரமாணங்களை செயற்படுத்துதல்.
- நில ஆக்கிரமிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் நிலங்களைப் பாதுகாத்தல்.
- சட்டத்தை அமுலாக்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.
- சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் மூலம் தொடர்புடைய மற்றும் தேவையான சட்ட அமுலாக்கம் குறித்து முகாமைத்துவம் பற்றி ஆய்வு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- சுற்றுலாவுடன் தொடர்பு கொள்ளும் ஏனைய தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- தற்போதைய சுற்றுலாத் துறைச் சட்டத்தில் திருத்தங்கள் உள்ளிட்ட வசதிகளை வழங்குதல் மற்றும் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கான நியாயப்படுத்தலுடன் கூடிய மாற்று வழிகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

**எதிர்பார்க்கப்படும் நபர்**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் மற்றும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நொத்தாரிசாகவிருத்தல் அத்துடன் சட்டத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

சத்தியப்பிரமாணம் செய்ததன் பின் பதினைந்து (15) வருடங்கள் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்க நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனத்தில் ‘‘முகாமைத்துவ மட்டத்தில்’’ இயைபுடைய துறையில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள்***

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

2. முகாமைத்துவ சேவை (MM 1-2) சேவை வகுதியில் Iஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பளம் அளவு**

HM-1-1 - ரூபா 140,640/- 15 x 4,100/- ரூபா 202,140 ஆகும்.

**ஆரம்பச் சம்பளம்** - ரூபா 105,399 + வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு

**அனுகூலங்கள்**

- ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு விரிவான மற்றும் கவர்ச்சிகரமான மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- வாகனக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு
- தொடர்பாடல் கொடுப்பனவுகள்
- தொழில்சார் கொடுப்பனவுகள்
- கடன் வசதிகள்
- தொழில் மேம்பாட்டிற்கான பயிற்சி

இந்தப் பதவிக்கான சரியான நபர் நான்தான் என நீங்கள் நினைத்தால் தயவு செய்து உங்களது சுய தரவுகள் சகிதம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பங்குபற்றிய கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் வேலை அனுபவம் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர்களுடன் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 2025 மே 09ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவுசெய்து குறிப்பிடவும்.

**தலைவர்,**

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை,**

**80, காலி வீதி, கொழும்பு-03.**